# <u>தேவகோட்டை நகராட்சி</u>

தேவகோட்டை நகராட்சி வளாகத்தில் சாதாரணக்கூட்டம் தனி அலுவலரால் 31.07.2019ம்தேதி வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு கூட்டம் நடைபெறவுள்ளது. அவ்வமயம் கீழ்கண்ட பொருட்கள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

ஆணையாளர்/தனி அலுவலர்
தேவகோட்டை நகராட்சி

**<u>பொருள்–686</u>**

**தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட 8வது வார்டு பகுதியில் 8 சோலார் விளக்குகளும் மற்றும் 19வது வார்டு தொண்டியார் வீதி, பகுதியில் 2 சோலார் விளக்குகளும், அதற்கான கீழ்தளமும் தங்களது சொந்த செலவில் மேற்கண்ட பகுதிகளில் அமைக்க அனுமதி அளித்திட கோரி திரு.S.V. சேவுகன் செட்டியார், தேவகோட்டை அவர்களின் 05.07.2019–ந் தேதிய கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.**

**<u>அலுவலகக்குறிப்பு</u>–தேவகோட்டை திரு.S.V.சேவுகன் செட்டியார், அவர்கள், தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட பகுதியான வார்டு –8, மற்றும் வார்டு –19, ஆகிய பகுதிகளில் தங்களது சொந்த செலவில் சோலார் விளக்குகள் அமைத்துக்கொள்ளவும் மூன்று ஆண்டுகள் தொடர்ந்து தங்களது சொந்த பொறுப்பில் பராமரிப்பு பணி பார்த்து வரவும் மன்றம் அனுமதிக்கலாம்.**

**<u>நகர்மன்ற தீர்மான எண்.686, அலுவல் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள்–687</u>**

**இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதிய BPL பயனாளிகளின் விபரங்கள் வலைதளத்தில் பதிவேற்றம் செய்து தயார் நிலையில் உள்ளதாகவும் அதனால் நகல் எடுத்து Field Verification செய்து முடிக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் சுமார் 6573 பதிவேடுகள் சுமார் 13146 பக்கங்கள் நகல் எடுக்கப்பட வேண்டியுள்ளது. இந்நிலையில் மின்பழுதினால் கணினி அறையில் Copier Machine Richo MP 2011 பழுதான நிலையில் உள்ளது. மேலும் Brother HL 5350 DN ஒன்றும் பழுதான நிலையில் உள்ளது. எனவே இரண்டு பிரிண்டர்களையும் வெளி கணினி நிருவனங்கள் மூலம் பழுது பார்க்கவேண்டியுள்ளது. மேலும் கணினி அறையில் உள்ள இண்டர்நெட் மூலமாக அலுவலகம் முழுமைக்கும் இண்டர்நெட் சேவை பயன்படுத்தப்பட்டு வருகிறது. கணினி அறையில் உள்ள மோடம் மிகப் பழமையானதாக இருப்பதால் அடிக்கடி இண்டர்நெட் இணைப்பு துண்டிக்கப்பட்டு வருகிறது. எனவே கணினி அறைக்கு ஒரு புதிய மோடமும் ஆணையர் அறைக்கு தனியாக இண்டர் நெட் இணைப்பு வாங்க வேண்டி இருப்பதால் ஆணையர் அறைக்கு ஒரு இண்டர் நெட் மோடமும் ஆக மொத்தம் இரண்டு மோடம்கள் வாங்க வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட பணிகளுக்கான**

**உத்தேச செலவினத் தொகை ரூ.25,000/—ம் பொது நிதியில் செலவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.**

**அலுவலகக்குறிப்பு— மன்றம்அனுமதிக்கலாம்.**

**<u>நகர்மன்ற தீர்மான எண்.687, அலுவல் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள்—688</u>

தேவகோட்டை நகராட்சியில் **2018—2019**ஆம் நிதி ஆண்டில் கீழ்காணும் பல்வேறு திட்டப்பணிகளுக்கு, ஒப்பந்தப்புள்ளிகள் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு கீழ்காணும் விளம்பர நிறுவனத்திடம் இருந்து பட்டியல் பெறப்பட்டுள்ளது.

| வ.எண் | நாளிதழின் பெயர் | பட்டியல் எண் | தொகை |
|---|---|---|---|
| **1.** | மார்க் மீடியா | DIPR/1277/2019-WS.H.S.L | **57,382/—** |
| **2.** | மக்கள் குரல் | MDUMAB-080900632 | **4,737/—** |
| மொத்தம் | | | **62,119/—** |

மேற்காணும் விளம்பர நிறுவனங்களுக்கு தொகை **ரூ.62,119/— வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வழங்கப்படுகிறது.**
**<u>அலுவலகக்குறிப்பு</u>—மன்றம் அனுமதிக்கலாம்.**

**<u>நகர்மன்ற தீர்மான எண்.688, அலுவல் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள்—689</u>

இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்காக எழுதுபொருட்கள், படிவங்கள், கணினி டோனர்கள் மற்றும் பணமதிப்பு படிவங்கள் தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்கோ சர்வீஸ், நிறுவனம் திருச்சி மூலம் கொள்முதல் செய்யப்பட்டதற்கான பட்டியல் கீழ்கண்டுள்ளவாறு வரப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| | **I.** | |
| 1. | Tonner, Idytuken , Paper Book, A4 Paper. | Rs.1,84,558 |
| 2. | A4 paper, Market collection, Token Rs.10/-, Alagappa Oorani Token. | Rs.1,48,680 |
| 3. | Tonner, Wrapper, Sheet Note, Register. | Rs.90,340 |
| | **II.** | |
| 1. | Tonner 78A, Brother Tonner, Wrapper sheet, Chelan Register, Number Machine, Date Sheet, M.Book 25 Page, 50 Page, தன்பதிவேடு Service Request Receipt. | Rs.2,74,308 |
| 2. | Idly Token | Rs.31,860 |

| | | |
|---|---|---|
| 3 | Attendance Register, Attendance Running Note, A4 Size, Daily Market File Pad, Death Report, 4 Queer Ruled Note. | Rs.57,507 |
| 4. | Birth Certificate , Death Certificate, 12A Toner , Revenue Fund Chitta, M.F. Log Book, T.A.Bill, Alagappa Park, A4 Size/ | Rs.1,63,825 |
| 5. | Sambar Rice Token, Curd Rice Token. | Rs.31,860 |
| | **Total** | **9,82,938.00** |

எனவே மேற்காணும் பட்டியல் தொகை ரூ.9,82,938/– இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
<u>அலுவலகக்குறிப்பு</u>– மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>நகர்மன்ற தீர்மான எண்.689, அலுவல் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள்–690</u>

**நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களது அலுவலக சுற்றறிக்கை ந.க.எண்.44555/2013/பி3, நாள்.28.02.2019ன் படியும் 2019 ஆம் வருடத்திய தமிழ்நாடு நகராட்சிகள் இரண்டாம் திருத்தச் சட்டம் 12ன் படியும் (No.of The Tamil Nadu Municipal laws Second amendment Act 2019 Published in Tamil Nadu Government Gazetle Extraordinary No.75, Dated 21.02.2019) மற்றும் தமிழ்நாடு அரசின் சுற்றுப்புறசூழல் மற்றும் வனத்துறை அரசாணை எண்.84, நாள்.25.06.2018ன் படியும் தமிழ்நாடு நகராட்சி பகுதிகளில் ஒருமுறை பயன்படுத்தி தூக்கி வீசப்படக்கூடிய (One Time use and throwaway plastics நெகழியை தயாரித்தல், சேகரித்தல், வழங்குதல், கொண்டு செல்லுதல், விற்பனை செய்தல், பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் ஆகியவற்றை தடை செய்ததன் அடிப்படையில் துணை விதிகள் ஏற்படுத்தியோ அல்லது ஏற்கனவே இயற்றப்பட்ட துணைவிதிகளில் திருத்தங்கள் மேற்கொண்டு அரசிதழில் வெளியிட தெரிவித்துள்ளதன்அடிப்படையில் தேவகோட்டை நகராட்சி பகுதியில் ஒரு முறை பயன்படுத்தி தூக்கி வீசப்படக்கூடிய நெகிழியை தயாரித்தல், சேகரித்தல், வழங்குதல், கொண்டு செல்லுதல், விற்பனை செய்தல், பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் ஆகியவற்றை தடை செய்தும் ஏற்கனவே இயற்றப்பட்ட தேவகோட்டை நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணைவிதிகள் 2016 சிவகங்கை மாவட்ட அரசிதழில் எண்.3, நாள்.25.07.2017–இல் கீழ் கண்ட திருத்தங்கள் செய்து மாவட்ட அரசிதழில் வெளியிடவும் அதற்கான செலவினங்களுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| **I** | **3ம் பிரிவிற்கான திருத்தங்கள்** | **2016 ஆம் ஆண்டு தேவகோட்டை நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகளில் 3ஆம் பிரிவில் (22) ஆம் கூறுக்கு பின்பு பின்வரும் கூறுகள் சேர்க்கப்படும்.** | |
| | | **23.** | **செயலாக்க அதிகாரி நகராட்சிப் பகுதிகளில் செயலாக்க அதிகாரி எனப்படுவார் நகராட்சி ஆணையாளர் ஆவார்.** |

| | | | |
|---|---|---|---|
| | | 24. | ஆய்வு நடத்தி தண்டம் வசூல் செய்யும் அதிகாரி ஆய்வு செய்து தண்டம் வசூல் செய்யும் அதிகாரி எனப்படுவார்கள் நகராட்சிப் பகுதிகளில் துப்புரவு ஆய்வாளர், நகர்நல அலுவலர் மற்றும் ஆணையரால் அதிகாரமளிக்கப்பட்ட பிற பணியாளர்களாவர். |
| | | 25. | மேல்முறையீட்டு அலுவலர் இந்த உபவிதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பொருளடக்கம் தொடர்பான கருத்துக்களில் மேல் முறையீட்டு அலுவலர் நகராட்சி ஆணையாளர் ஆவார். |
| | | 26. | <u>தண்டனைகள் விதிக்கும் முறைகள்</u>:<br>இந்த உப விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிகளை மீறுபவர்களுக்கு முதல் முறை இரண்டாம் முறை மற்றும் மூன்றாம் முறையான குற்றத்திற்கு அட்டவணை 2ல் கண்டுள்ளவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அபராத்தை குற்றம் நடைபெறுகின்ற இடத்திலேயே (Spot Fine) வசூலிக்கப்படுவதுடன் தடை செய்யப்பட்ட நெகிழிகள் பறிமுதல் செய்யப்படும் நான்காவது முறையாக மீறுபவர்களுக்கு கூடுதல் தொடர் அபராத்துடன் உடனடியாக குடிநீர் இணைப்பு துண்டித்தல் மற்றும் தொழில்களுக்கான உரிமம் (D & O) இரத்து செய்யப்படும். |
| | | அ) | 27.வர்த்தக நிறுவனத்தின் வகைப்பாடு.<br>மொத்தமாக (WholeSale) சேமித்தல்/வழங்குதல் கொண்டு செல்லுதல் விற்பனை செய்தல் பகிர்ந்தளித்தல். |
| | | ஆ) | வணிக வளாக வளாகங்கள் துணிக்கடைகள், மற்றும் பல்பொருள் அங்காடிகள் திரை அரங்குகள் திருமண மண்டபங்கள் மதுபான கூடங்கள், தொழிற்சாலை பள்ளி கல்லூாி நிறுவனங்கள் மற்றும் பெரிய வணிக நிறுவனங்கள். |
| | | இ) | மளிகை கடைகள், மருந்து கடைகள், பழக்கடைகள், காய்கறி கடைகள், இறைச்சி மற்றும் மீன்கடைகள் மற்றும் நடுத்தர வணிக நிறுவனங்கள் முதலானவைகள். |
| | | ஈ) | சிறிய வணிக விற்பனையாளர்கள் தெருவோரங்கள் கடைகள் இதர சிறிய வணிக நிறுவனங்கள் மற்றும் அரசு, அரசு சார்பு நிறுவனங்கள். |
| II. | 4ம் பிரிவிற்கான திருத்தங்கள். | | 2016 ஆம் ஆண்டு தேவகோட்டை நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகளில் 4ஆம் பிரிவில் 2ஆம் கூறுக்கு பின்பு பின்வரும் கூறுகள் சேர்க்கப்படும். |
| | | 2(1) | ஒரு முறை பயன்படுத்தி தூக்கி வீசப்படக்கூடிய ( One Time Use and Throwaway Plastic) நெகிழியை தயாரித்தல் சேகரித்தல் வழங்குதல் கொண்டு செல்லுதல் விற்பனை செய்தல், பயன்படுத்துதல் மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | | | பகிர்ந்தளித்தல் ஆகியவை தடை செய்யப்படுகின்றன மீறினால் தடை செய்யப்பட்ட பொருள்களை பறிமுதல் செய்வதுடன் அபராத அட்டவணை II ல் குறிப்பிட்டவாறு தண்டம் செலுத்த வேண்டி வரும். |
| III | 6ம் பிரிவிற்கான திருத்தங்கள். | | 2016 ஆம் ஆண்டு தேவகோட்டை நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகளில் 6ஆம் பிரிவில். |
| | | | i)கூறு (2) நீக்கம் செய்யப்படுகிறது.<br>ii) கூறு (3) நீக்கம் செய்யப்படுகிறது.<br>iii)கூறு (4) நீக்கம் செய்யப்படுகிறது. |
| IV | 7ம் பிரிவிற்கான திருத்தங்கள். | | 2016 ஆம் ஆண்டு தேவகோட்டை நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகளில் 7ஆம் பிரிவில்.<br>i)கூறு (a) நீக்கம் செய்யப்படுகிறது. |
| V | 8ம் பிரிவிற்கான திருத்தங்கள். | | 2016 ஆம் ஆண்டு தேவகோட்டை நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகளில் 8ஆம் பிரிவில்.<br>8.2) ஆம் கூறுக்கு பின்பு பின்வரும் கூறு சேர்க்கப்படும்.<br>8.3)இந்த திருத்தப்பட்ட துணை விதிகள் தொடங்கிய நாளும் அதற்கு பின்பும் பழக்கப்படும்/ எச்சரிக்கை காலம் 90 நாட்கள் ஆகும். அதற்கு பிறகு இந்த திருத்தப்பட்ட துணை விதிகளை மீறுதல் இருந்தால் அபராத அட்டவணை (II) ன்படி இந்த திருத்தப்பட்ட துணை விதிகளை மீறும் நிகழ்வு ஒவ்வொன்றுக்கும் அபராத தொகையுடன் தண்டிக்கப்படுவார்.<br>8.4) அட்டவணை I,II-ல் குறிப்பிட்டபடி அபராத தொகை கட்ட இயலவில்லை அல்லது மறுத்தாலோ எனில் அவருக்கு எதிராக கடையை / நிறுவனத்தை அல்லது குடோனைப் பூட்டி முத்திரை இடுவதுடன் நகர காவல் சட்டம் இந்திய குற்றவியல் நடைமுறை சட்டம் மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பொதுசுகாதாரம் சட்டம் 1939 – ன்படி ஆணையாளர் அல்லது அவரால் முழு அதிகாரம் அளிக்கப்பட்ட நகராட்சி அதிகாரி மூலம் சட்ட ரிதியான வழக்கு மற்றும் மேல் நடவடிக்கை எடுக்கப்படும். |
| VI | புது அட்டவணை II சேர்த்தல். | | 2016 ஆம் ஆண்டு தேவகோட்டை நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகளில் அபராத அட்டவணை I-க்கு பின்பு அட்டவணையில் சேர்க்கப்படும். |

## அட்டவணை – II

2016 ஆம் ஆண்டு தேவகோட்டை நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகளில் 2 (1) ஆம் கூறி தெரிவிக்கப்பட்ட விதிகளை மீறினால் செலுத்த வேண்டிய அபராத தொகை.

| வ. எண் | குற்றங்கள் | முதல் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | இரண்டாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | மூன்றாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஒருமுறை பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசக்கூடிய வகையிலான நெகிழியை சேமித்தல், வழங்குதல், கொண்டு செல்லுதல், விற்பனை செய்தல், பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்து அளித்தல். | 25000 | 50000 | 100000 |
| 2. | வணிக வளாகங்கள் துணிக்கடை மற்றும் பல்பொருள் அங்காடிகள் போன்ற மிகபெரிய வணிக நிறுவனங்களில் ஒரு முறை பயன்படுத்தி தூக்கி வீசப்படிக் கூடிய வகையிலான நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல். | 10000 | 15000 | 20000 |
| 3. | மளிகை கடைகள் மற்றும் மருந்து கடைகள் போன்ற நடுத்தர வணிக நிறுவனகங்களில் ஒரு முறை பயன்படுத்தி வீசப்படிக்கூடிய வகையிலான நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல். | 1000 | 2000 | 5000 |
| 4. | சிறிய வணிக விற்பனையாளர்கள் நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல். | 100 | 200 | 500 |

<u>அலுவலகக்குறிப்பு—</u> மன்றம் அனுமதிக்கலாம்.

<u>நகர்மன்ற தீர்மான எண்.690, அலுவல் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>

<u>பொருள்—691</u>

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மதுரை அவர்களின் அறிவுறுத்தலின்படி தேவகோட்டை நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2016ன் கீழ் 2019—ஆம் ஆண்டுக்கான திடக்கழிவு மேலாண்மை செயல் திட்டங்கள் மற்றும் கொள்கையினை (Solid Waste management Action Plan & Policy) தயார் செய்து அதில் கொள்கையினை மாவட்ட அரசிதழில் வெளியிடுவதற்கான உத்தேச செலவினம் தொகை ரூ.30,000/— ( ரூபாய் முப்பதாயிரம் மட்டும் ) மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு—</u>

1)திடக்கழிவு மேலாண்மை திட்டம் மற்றும் கொள்கைகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
2)மேற்கூறப்பட்ட பணிக்கான செலவினம் தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>நகர்மன்ற தீர்மான எண்.691, அலுவல் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

**தனி அலுவலர்/ஆணையாளர்**
தேவகோட்டை நகராட்சி

## <u>மன்றப்பொருள்</u>

**நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களது அலுவலக சுற்றறிக்கை ந.க.எண்.44555/2013/பி3, நாள்.28.02.2019ன் படியும் 2019 ஆம் வருடத்திய**

தமிழ்நாடு நகராட்சிகள் இரண்டாம் திருத்தச் சட்டம் 12ன் படியும் (No.of The Tamil Nadu Municipal laws Second amendment Act 2019 Published in Tamil Nadu Government Gazetle Extraordinary No.75, Dated 21.02.2019) மற்றும் தமிழ்நாடு அரசின் சுற்றுப்புறசூழல் மற்றும் வனத்துறை அரசாணை எண்.84, நாள்.25.06.2018ன் படியும் தமிழ்நாடு நகராட்சி பகுதிகளில் ஒரு முறை பயன்படுத்தி தூக்கி வீசப்படக்கூடிய One Time use and throwaway plastics நெகழியை தயாரித்தல், சேகரித்தல் வழங்குதல் கொண்டு செல்லுதல் விற்பனை செய்தல் பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் ஆகியவற்றை தடை செய்ததன் அடிப்படையில் துணை விதிகள் ஏற்படுத்தியோ அல்லது ஏற்கனவே இயற்றப்பட்ட துணைவிதிகளில் திருத்தங்கள் மேற்கொண்டு அரசிதழில் வெளியிட தெரிவித்துள்ளதன் அடிப்படையில் தேவகோட்டை நகராட்சி பகுதியில் ஒரு முறை பயன்படுத்தி தூக்கி வீசப்படக்கூடிய கூடிய நெகிழியை தயாரித்தல், சேகரித்தால் வழங்குதல் கொண்டு செல்லுதல் விற்பனை செய்தல் பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் ஆகியவற்றை தடை செய்தும் ஏற்கனவே இயற்றப்பட்ட தேவகோட்டை நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணைவிதிகள் 2016 சிவகங்கை மாவட்ட அரசிதழில் எண்.3, நாள்.25.07.2017)இல் கீழ் கண்ட திருத்தங்கள் செய்து மாவட்ட அரசிதழில் வெளியிடவும் அதற்கான செலவினங்களுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| I | 3ம் பிரிவிற்கான திருத்தங்கள் | 2016 ஆம் ஆண்டு தேவகோட்டை நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகளில் 3ஆம் பிரிவில் (22) ஆம் கூறுக்கு பின்பு பின்வரும் கூறுகள் சேர்க்கப்படும். | |
| | | 23. | செயலாக்க அதிகாரி நகராட்சிப் பகுதிகளில் செயலாக்க அதிகாரி எனப்படுவார் நகராட்சி ஆணையாளர் ஆவார். |
| | | 24. | ஆய்வு நடத்தி தண்டம் வசூல் செய்யும் அதிகாரி ஆய்வு செய்து தண்டம் வசூல் செய்யும் அதிகாரி எனப்படுவார்கள் நகராட்சிப் பகுதிகளில் துப்புரவு ஆய்வாளர், நகர்நல அலுவலர் மற்றும் ஆணையரால் அதிகாரமளிக்கப்பட்ட பிற பணியாளர்களாவர். |
| | | 25. | மேல்முறையீட்டு அலுவலர் இந்த உபவிதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பொருளடக்கம் தொடர்பான கருத்துக்களில் மேல் முறையீட்டு அலுவலர் நகராட்சி ஆணையாளர் ஆவார். |

| | | | |
|---|---|---|---|
| | | 26. | <u>தண்டனைகள் விதிக்கும் முறைகள்:</u><br>இந்த உப விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிகளை மீறுபவர்களுக்கு முதல் முறை இரண்டாம் முறை மற்றும் மூன்றாம் முறையான குற்றத்திற்கு அட்டவணை 2ல் கண்டுள்ளவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அபராத்தை குற்றம் நடைபெறுகின்ற இடத்திலேயே (Spot Fine) வசூலிக்கப்படுவதுடன் தடை செய்யப்பட்ட நெகிழிகள் பறிமுதல் செய்யப்படும் நான்காவது முறையாக மீறுபவர்களுக்கு கூடுதல் தொடர் அபராத்துடன் உடனடியாக குடிநீர் இணைப்பு துண்டித்தல் மற்றும் தொழில்களுக்கான உரிமம் (D& O) இரத்து செய்யப்படும். |
| | | அ) | 27.வர்த்தக நிறுவனத்தின் வகைப்பாடு.<br>மொத்தமாக (WholeSale) சேமித்தல்/வழங்குதல் கொண்டு செல்லுதல் விற்பனை செய்தல் பகிர்ந்தளித்தல். |
| | | ஆ) | வணிக வளாக வளாகங்கள் துணிக்கடைகள், மற்றம் பல்பொருள் அங்காடிகள் திரை அரங்குகள் திருமண மண்டபங்கள் மதுபான கூடங்கள், தொழிற்சாலை பள்ளி கல்லூரி நிறுவனங்கள் மற்றும் பெரிய வணிக நிறுவனங்கள். |
| | | இ) | மளிகை கடைகள், மருந்து கடைகள், பழக்கடைகள், காய்கறி கடைகள், இறைச்சி மற்றும் மீன்கடைகள் மற்றும் நடுத்தர வணிக நிறுவனங்கள் முதலானவைகள். |
| | | ஈ) | சிறிய வணிக விற்பனையாளர்கள் தெருவோரங்கள் கடைகள் இதர சிறிய வணிக நிறுவனங்கள் மற்றும் அரசு, அரசு சார்பு நிறுவனங்கள். |
| II. | 4ம் பிரிவிற்கான திருத்தங்கள். | | 2016 ஆம் ஆண்டு தேவகோட்டை நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகளில் 4ஆம் பிரிவில் 2ஆம் கூறுக்கு பின்பு பின்வரும் கூறுகள் சேர்க்கப்படும். |
| | | 2(1) | ஒரு முறை பயன்படுத்தி தூக்கி வீசப்படக்கூடிய ( One Time Use and Throwaway Plastic) நெகிழியை தயாரித்தல் சேகரித்தல் வழங்குதல் கொண்டு செல்லுதல் விற்பனை செய்தல், பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் ஆகியவை தடை செய்யப்படுகின்றன மீறினால் தடை செய்யப்பட்ட பொருள்களை பறிமுதல் செய்வதுடன் அபராத அட்டவணை II ல் குறிப்பிட்டவாறு தண்டம் செலுத்த வேண்டி வரும். |

| | | | |
|---|---|---|---|
| III | 6ம் பிரிவிற்கான திருத்தங்கள். | | 2016 ஆம் ஆண்டு தேவகோட்டை நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகளில் 6ஆம் பிரிவில். |
| | | | i)கூறு (2) நீக்கம் செய்யப்படுகிறது.<br>ii) கூறு (3) நீக்கம் செய்யப்படுகிறது.<br>iii)கூறு (4) நீக்கம் செய்யப்படுகிறது. |
| IV | 7ம் பிரிவிற்கான திருத்தங்கள். | | 2016 ஆம் ஆண்டு தேவகோட்டை நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகளில் 7ஆம் பிரிவில்.<br><br>i)கூறு (a) நீக்கம் செய்யப்படுகிறது. |
| V | 8ம் பிரிவிற்கான திருத்தங்கள். | | 2016 ஆம் ஆண்டு தேவகோட்டை நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகளில் 8ஆம் பிரிவில்.<br><br>8.2) ஆம் கூறுக்கு பின்பு பின்வரும் கூறு சேர்க்கப்படும்.<br><br>8.3)இந்த திருத்தப்பட்ட துணை விதிகள் தொடங்கிய நாளும் அதற்கு பின்பும் பழக்கப்படும்/ எச்சரிக்கை காலம் 90 நாட்கள் ஆகும். அதற்கு பிறகு இந்த திருத்தப்பட்ட துணை விதிகளை மீறுதல் இருந்தால் அபராத அட்டவணை (II) ன்படி இந்த திருத்தப்பட்ட துணை விதிகளை மீறும் நிகழ்வு ஒவ்வொன்றுக்கும் அபராத தொகையுடன் தண்டிக்கப்படுவார்.<br><br>8.4) அட்டவணை I,II-ல் குறிப்பிட்டபடி அபராத தொகை கட்ட இயலவில்லை அல்லது மறுத்தாலோ எனில் அவருக்கு எதிராக கடையை / நிறுவனத்தை அல்லது குடோனைப் பூட்டி முத்திரை இடுவதுடன் நகர காவல் சட்டம் இந்திய குற்றவியல் நடைமுறை சட்டம் மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பொதுசுகாதாரம் சட்டம் 1939 – ன்படி ஆணையாளர் அல்லது அவரால் முழு அதிகாரம் அளிக்கப்பட்ட நகராட்சி அதிகாரி மூலம் சட்ட ரிதியான வழக்கு மற்றும் மேல் நடவடிக்கை எடுக்கப்படும். |
| VI | புது அட்டவணை II சேர்த்தல். | | 2016 ஆம் ஆண்டு தேவகோட்டை நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகளில் அபராத அட்டவணை I-க்கு பின்பு அட்டவணையில் சேர்க்கப்படும். |

## அட்டவணை – II

2016 ஆம் ஆண்டு தேவகோட்டை நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகளில் 2 (1) ஆம் கூறி தெரிவிக்கப்பட்ட விதிகளை மீறினால் செலுத்த வேண்டிய அபராத தொகை.

| வ. எண் | குற்றங்கள் | முதல் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | இரண்டாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | மூன்றாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் |
|---|---|---|---|---|
| 1. | ஒரு முறை பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசக்கூடிய வகையிலான நெகிழியை சேமித்தல், வழங்குதல், கொண்டு செல்லுதல், விற்பனை செய்தல், பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்து அளித்தல். | **25000** | **50000** | **100000** |
| 2. | வணிக வளாங்களுகள் துணிக்கடை மற்றும் பல்பொருள் அங்காடிகள் போன்ற மிகபெரிய வணிக நிறுவனங்களில் ஒரு முறை பயன்படுத்தி தூக்கி வீசப்படிக்கூடிய வகையிலான நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல். | **10000** | **15000** | **20000** |
| 3. | மளிகை கடைகள் மற்றும் மருந்து கடைகள் போன்ற நடுத்தர வணிக நிறுவனகங்களில் ஒரு முறை பயன்படுத்தி வீசப்படிக்கூடிய வகையிலான நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல். | **1000** | **2000** | **5000** |
| 4. | சிறிய வணிக விற்பனையாளர்கள் நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல். | **100** | **200** | **500** |

அலுவலகக்குறிப்பு— மன்றம் அனுமதிக்கலாம்.

சுகாதார ஆய்வாளர்          தனி அலுவலர்/ஆணையாளர்,

(ந.க.எண்.103/2017/எச்1)

## மன்றப்பொருள்

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மதுரை அவர்களின் அறிவுறுத்தலின்படி தேவகோட்டை நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2016ன் கீழ் 2019–ஆம் ஆண்டுக்கான திடக்கழிவு மேலாண்மை செயல் திட்டங்கள் மற்றும் கொள்கையினை **(Solid Waste management Action Plan & Policy)** தயார் செய்து அதில் கொள்கையினை மாவட்ட அரசிதழில் வெளியிடுவதற்கான உத்தேச செலவினம் தொகை ரூ.30,000/– ( ரூபாய் முப்பதாயிரம் மட்டும் ) மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு–

1)திடக்கழிவு மேலாண்மை திட்டம் மற்றும் கொள்கைகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

2)மேற்கூறப்பட்ட பணிக்கான செலவினம் தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ஒப்பம்) கே.சுதா

ஆணையாளர்/தனி அலுவலர்

தேவகோட்டை நகராட்சி